இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 05-08-2025

# தேர்தல் ஆணையம் பதில் சொல்ல வேண்டும்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அடைந்த வெற்றி என்பது 'திருட்டுத்தனமானது' என்று பகிரங்கமாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார். இந்தியாவின் மக்களாட்சி மரபை குழி தோண்டிப் புதைக்கும் செயல்களுக்கு தேர்தல் ஆணையம் துணை போயிருக்கும் சந்தேகத்தை இது எழுப்புகிறது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கைப்பாவையாகப் பயன்படுத்திக் கொண்டு பா.ஜ.க. தனது வெற்றிகளை அடைந்து வருவதாக ராகுல் காந்தி தொடர்ந்து குற்றச்சாட்டுகளை வைத்து வருகிறார்.

**“போலி வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்தல், வாக்காளர் வாக்குப் பதிவை உயர்த்துதல், பா.ஜ.க. வெற்றிபெற வேண்டிய பகுதிகளில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல், அதன்பிறகு அதற்கான ஆதாரங்களை மறைத்தல் போன்றவற்றை ‘மேட்ச் பிக்சிங்’ மாதிரி செய்கிறது பா.ஜ.க.”** என்று மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தலை முன் வைத்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார் ராகுல் காந்தி. இதனை ஆதாரப்பூர்வமாக இன்னமும் தேர்தல் ஆணையம் மறுக்கவில்லை. இப்போது 2024 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே முறைகேடுகள் நடந்துள்ளது என்று ராகுல் காந்தி சொல்கிறார்.

“கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மோசடி நடந்துள்ளது. அதற்கான ஆதாரங்களைத் தனது கட்சி விரைவில் வெளியிடும்” என்று நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் பேசியபோது ராகுல் காந்தி தெரிவித்தார். கடந்த தேர்தலில் பா.ஜ.க.வுக்கு குறுகிய பெரும்பான்மையைப் பெற்றுத்தரும் நோக்கத்துடன், மோசடி செய்யப்பட்டதாக அவர் சாடியுள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது, வாக்காளர் பட்டியலில் பேரளவில் மோசடி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களை காங்கிரஸ் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவித்தார் ராகுல் காந்தி.

இந்த நிலையில், டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் சட்ட மாநாட்டில் கலந்துகொண்ட ராகுல் காந்தி, வாக்கு திருட்டுக்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

**“தேர்தல் முறையைப் பற்றி நான் சமீப காலமாகப் பேசி வருகிறேன். 2014 முதலே தேர்தல் முறையில் ஏதோ தவறு இருப்பதாக எனக்குச் சந்தேகம் இருந்து வந்தது. குஜராத் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றதில் எனக்கு சந்தேகம் இருந்தது. நாங்கள் இதைப் பற்றி பேசும்போதெல்லாம் மக்கள் ஆதாரங்கள் எங்கே என்று கேட்டார்கள்? பின்னர் மகாராஷ்டிர மக்களவைத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம். ஆனால், 4 மாதங்களில் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் நாங்கள் படுதோல்வி அடைந்தோம். 3 வலிமையான கட்சிகள் திடீரென மறைந்துவிட்டன.**

**தேர்தல் முறைகேடுகளைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தோம். மகாராஷ்டிரத்தில் அதனைக் கண்டுபிடித்தோம், மக்களவைத் தேர்தலுக்கும் பேரவைத் தேர்தலுக்கும் இடையே ஒரு கோடி புதிய வாக்காளர்கள் தோன்றினார்கள். அந்த வாக்குகளில் பெரும் பகுதி பா.ஜ.க.வுக்குச் சென்றது.**

**தற்போது எந்த சந்தேகமும் இல்லாமல் சொல்கிறேன், எங்களிடம் ஆதாரம் உள்ளது. தேர்தல் ஆணையம் செயல்படவில்லை என்பதை நிரூபிக்க எங்களிடம் ஆதாரம் உள்ளது. அது சமரசம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆதாரத்தைக் கண்டுபிடிக்க நாங்கள் 6 மாதங்கள் இடைவிடாமல் உழைத்தோம். சில நாள்களில் மக்களவைத் தேர்தலை பா.ஜ.க. மோசடி செய்து வெற்றி பெற்றதற்கான ஆதாரத்தை வெளியிடுவோம். கர்நாடகா மாநிலத்தில் ஒரு தொகுதியில் 6.5 லட்சம் வாக்காளர்களில் 1.5 லட்சம் பேர் போலியானவர்கள்.**

**உண்மை என்னவென்றால், இந்தியாவில் தேர்தல் முறை ஏற்கனவே இறந்துவிட்டது. மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் இந்தியாவின் பிரதமராகி இருக்கிறார் மோடி. 15 இடங்களில் மோசடி செய்யப்படாமல் இருந்திருந்தால், அவர் இந்தியாவின் பிரதமராக இப்போது இருந்திருக்க மாட்டார்”** என்று பேசி இருக்கிறார் ராகுல் காந்தி. அவரது குற்றச்சாட்டுகள் சாதாரணமானவை அல்ல. சாமானியர் சொன்ன குற்றச்சாட்டுகளும் அல்ல.

தேர்தல் ஆணையர்கள் நியமனம் முதல் தனது மோசடிகளை பா.ஜ.க. செய்தது. அதே போல் தேர்தல் தொடர்பான சட்டங்களையும் திருத்தியது. அரியானா மாநில சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், அறிவிக்கப்பட்ட வாக்குகளுக்குமே அதிக வித்தியாசம் சில தொகுதிகளில் இருந்தது. எனவே சி.சி.டி.வி. காட்சிகளைத் தருமாறு பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மஹமூத் பிரச்சா என்பவர் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே, ‘காகித ஆவணங்களை மட்டும் தான் தர முடியும், சி.சி.டி.வி. கேமரா பதிவுகளையோ, காட்சிகளையோ தர முடியாது’ என்று தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம் கொண்டு வந்து விட்டார்கள்.

வெளிப்படைத்தன்மை கொண்ட தேர்தல் முறையை ஒழிக்கும் வகையில் தேர்தல் நடத்தை விதிகள் 93(2)(அ)-இல் ஆபத்தான திருத்தங்களைச் செய்தார்கள். இவை போன்ற மோசடிகளால் தான் பா.ஜ.க. வெற்றி பெற்று வருகிறது.

2024 தேர்தல் மூலமாக மீண்டும் ஆட்சிக்கு வர தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி பா.ஜ.க. பல்வேறு சதி, மோசடிச் செயல்களைச் செய்துள்ளது என்ற குற்றச்சாட்டு இந்தியப் பொது வெளியில் பரவிவிட்டது. இதற்குத் தேர்தல் ஆணையம் பதில் சொல்லியாக வேண்டும். பொத்தாம் பொதுவாக அல்ல; தொகுதி வாரியாக பதில் அளிக்க வேண்டும்.

**வாக்காளர் சேர்க்கை முதல் நீக்கம் வரை ஒவ்வொரு தொகுதியாக பதில் அளிக்க வேண்டும். தேர்தலின் போது பல தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையை பல மணி நேரம் நிறுத்தி வைத்துவிட்டு, திடீரென்று அறிவித்தார்கள். இந்த மர்மங்களுக்கு எல்லாம் பதில் சொல்லியாக வேண்டும்.**



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (3.8.2025) சென்னை – சைதாப்பேட்டை – தாடண்டர் நகரில் உள்ள, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களை, அவரது இல்லம் சென்று மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடினார். கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

### நாட்டுப்பண் இயற்றப்பட்ட மொழிக்கு அவமதிப்பு:

# வங்காள மொழியை வங்கதேச மொழி என்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஆக. 5 -

நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்காள மொழிக்கு இழைக்கப்பட்ட நேரடி அவமதிப்புதான் வங்காள மொழியை வங்கதேச மொழி என டெல்லி காவல் துறை குறிப்பிட்டிருப்பது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டித்து சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தள பதிவு வருமாறு: -

**ஒன்றிய உள்துறை அமைச்சரவையின் கீழ் இயங்கும் டெல்லி காவல்துறையானது வங்காள மொழியினை ‘வங்க தேச மொழி’ எனக் குறிப்பிட்டிருக்கிறது. இது நம் நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்க மொழிக்கு இழைக்கப்பட்டுள்ள நேரடி அவமதிப்பாகும்.**

**இத்தகைய அறிக்கைகள் தெரியாமல் நிகழ்ந்த பிழையோ தவறோ அல்ல. இந்தியாவின் பன்மைத்துவத்தைத் தொடர்ந்து சிறுமைப்படுத்தி, ஒருவரது அடையாளத்தைக் கொண்டு தாக்கும் ஆட்சியின் கோர மன நிலையைத்தான் இவை அம்பலப்படுத்துகின்றன.**

**இந்தி அல்லாத மொழிகளின் மீது இத்தகைய தாக்குதல் தொடுக்கப்படும் நேரத்தில், மேற்கு வங்க மாநிலத்தின் மொழியையும் மக்களையும் காக்கும் அரணாகச் சகோதரி மமதா பேனர்ஜி அவர்கள் திகழ்கிறார். இந்தத் தாக்குதலுக்குத் தக்க பதிலடி தராமல் அவர் ஓயமாட்டார்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம்:

# ஆக. 7-ல் ராகுல் காந்தி இல்லத்தில் ‘இண்டியா கூட்டணி’ தலைவர்கள் ஆலோசனை!

புதுடெல்லி, ஆக. 5 -

இண்டியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் வரும் ஆகஸ்ட் 7 ஆம் தேதி காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியின் இல்லத்தில் சந்திக்க உள்ளனர்.

பா.ஜ.க. வெற்றி பெறுவதற்காக 2024 மக்களவைத் தேர்தலில் 7080 தொகுதிகளில் மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியது பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையில் வரும் ஆகஸ்ட் 7 ஆம் தேதி ‘இண்டியா கூட்டணி’ கூட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



ஆகஸ்ட் 7ஆம் தேதி ராகுல் காந்தியின் டெல்லி இல்லத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ‘இண்டியா கூட்டணி’ கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். பிஹாரில் நடந்து வரும் சிறப்பு தீவிர திருத்தம் (SIR), மகாராஷ்டிராவில் வாக்காளர் பட்டியல் சர்ச்சை, ஆபரேஷன் சிந்தூர், இந்தியா அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் மற்றும் ட்ரம்பின் மத்தியஸ்த பேச்சு ஆகியவை குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. மேலும், விரைவில் நடைபெறவுள்ள குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்கியதிலிருந்து இண்டியா கூட்டணியின் இரண்டாவது கூட்டம் இதுவாகும். முன்னதாக ஜூலை 19 ஆம் தேதி நடைபெற்ற காணொலி காட்சி வாயிலான கூட்டத்தில் என்சிபி (எஸ்பி) தலைவர் சரத் பவார், ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவ், ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் சிவசேனா (யுபிடி) தலைவர் உத்தவ் தாக்கரே உட்பட 24 கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில், தேசிய மாநாட்டு தலைவர் பரூக் அப்துல்லாவும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளார். அவர், “பிஹாரில் தற்போது ஆட்சியில் உள்ள கட்சி வெற்றி பெறும் வகையில் ஏற்கனவே ஒரு ஏற்பாட்டை செய்துள்ளனர். ஆகஸ்ட் 7 ஆம் தேதி ‘இண்டியா கூட்டணி’ தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். நான் ராகுல் காந்தியை சந்திக்கப் போகிறேன்” என்று பரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

### நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்

# அம்பாசமுத்திரத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

நெல்லை, ஆக. 5 -

நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோபாலசமுத்திரம் பேரூர், வடக்கூர் அ.தி.மு.க. முன்னாள் செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் 200 பேர் அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாகத் திறமையை கருத்தில் கொண்டும் “வெல்வோம் 200; படைப்போம் வரலாறு”, “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை, “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம், தற்போது “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம் போன்ற அறிவிப்புகளை தெரிந்து கொண்டும், புரிந்து கொண்டும், திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் கண் துஞ்சாமல் ஓயாத உழைப்பையும் பார்த்து கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டையும் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இது போன்ற எண்ணற்ற திட்டங்களால் ஈர்க்கப்பட்டு நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோபால சமுத்திரம் பேரூர், வடக்கூர் அ.தி.மு.க. முன்னாள் செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் அக்கட்சியில் இருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவருக்கும் கழக இருவண்ண சால்வை அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி, கோபாலசமுத்திரம் பேரூர்க் கழகச் செயலாளர் தி. வானுவாமலை உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், ரெண்டாடியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை பார்வையிட்டு. மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு பட்டா ஆணைகள், ஊட்டச்சத்து பெட்டகங்கள், மருந்து பெட்டகங்கள் உள்ளிட்ட நலத்திட்டங்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் ஒன்றியக் குழுத் தலைவர் கலைக்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் சுதா மற்றும் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், ஒன்றியச் செயலாளர் எஸ்.என். பூர்ணசந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் எஸ்.என்.உதயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.